**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.320/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆனந்தன் (எ) ஆனந்தராஜ் | த–பெ | தங்கவேல் |
| ஊர்: | : | பாரனூர் | | |
| வயது: | : | 40/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026**

1 ம் **எதிரி ஆஜர், 3 ம் எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பாரனூரில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 2015 அன்று நான் NNL பேருந்து நிறுவனத்தில் நடத்துனராக வேலை செய்து வந்தேன். 22.02.2015 அன்று இரவு 9.00 மணியளவில் கணக்கு வழக்குகலை முடித்து கொண்டிருந்தேன். அப்போது ராஜேந்திரன் மற்றும் இரண்டு நபர்கள் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த மீனாட்சி சுந்தரம் ஓட்டுநரிடம் உரிமையாளர் பாண்டியன் என்பவர் எங்கு உள்ளார் என்றும், எங்கடா உங்க ஓனர் என்றும் கேட்டார்கள். அதற்கு ஓட்டுநர் அவர்களிடம் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னார். ஓனர் இல்லை மேனேஜெர் நம்பர் தரவா என்று சொன்னார்கள், இதற்கு ராஜேந்திரன் என்பவர் உங்கள் ஓனர் புண்ட என்ன பெரிய ஆளா டா என்றும் கேட்டு மீனாட்சியை ராஜேந்திரன் அங்கிருந்த கட்டையை கொண்டு ஓங்கி மண்டையில் தாக்கினார். நானும் சரவணனும்விலக்கி வைத்தோம், பின்னர் மீனாட்சி சுந்தரத்தை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். மேற்படி விவரங்களை நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். அடித்தவுடன் அங்கிருந்து சென்று விட்டார்கள். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் போலீஸ் விசாரணையிலோ, வாக்குமூலத்திலோ, முதல்

விசாரணையிலோ என்னை போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணைசெய்யவில்லை என்று சொல்லவில்லை என்றால சரிதான். போலீஸ் விசாரணையில் அலுவலகத்தில் நான் கணக்கு முடித்து கொடுக்கும் போது வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரியை தவிர மற்ற எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது என்றால்சரிதான். 1ம் எதிரியை தவிர மற்ற எதிரிகளின் பெயர்களை யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனது ஓனர் சொல்லி கொடுத்ததின் பெயரில் நான் சொன்னேன் என்றால் சரிதன். காரைக்குடியில் தனியார் மோட்டார் வாகன ஓட்டுநர் மற்றும் நடத்துனர் சங்கம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதின் பொருப்பாளர் 1ம் எதிரி என்றால் சரிதான். காரைக்குடி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கத்தின் NNL பஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பாண்டி பொருப்பாளராக இருந்தார் என்றால் சரிதான். எதிரி சங்கதின் பொருப்பாளர் என்ற முறையில் 1ம்எதிரியும், தனியார் பேருந்து சங்கதின் உரிமையாளர் NNL பாண்டியும் அமர்ந்து தொழிளாளர் சம்மந்தமான பிரச்சனைகளை பேச்சுவார்த்தை நடத்தினார்கள் மேற்படி பேச்சுவார்தையில் சுமூக உடன்பாடு ஏற்படாததால் NNL பேருந்து உரிமையாளர் பாண்டி 1ம் எதிரியை பார்த்து என்னையவே எதிரித்து பேசுகிறாயா என்றும் தகாத வார்த்தையில் பேசியும் 1ம் எதிரியை அலுவலகத்தை விட்டு வெளியே போயி விடு என்று தாக்கி மேற்படி பாண்டி தான் வேளியே அனுப்பி உள்ளார் அதனை மறைப்பதற்கு PW1 மீனாட்சியை தாக்கியது போது ஒரு பொய்யான புகாரை கொடுத்து அந்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்வில்லை என்றும் நான் எனது உரிமையாளருக்கு ஆதரவாகவும், PW1 புகாருக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.20 11:24:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.